பக்கங்கள்: 09

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 25 திங்கட்கிழமை 10.01.2022 கதிர் 294

## பகல் வேளையில் மின் தடை இல்லை

பகல் வேளையில் மின்வெட்டை அமுல்படுத்துவதற்கான அவசியமில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

5 நாள்களுக்குப் போதுமான எரிபொருள் இது வரை கையிருப்பிலுள்ளது எனவும் இலங்கை மின்சார சபையின் பொதுமுகாமையாளர் எம்.ஆர். ரணதுங்க குறிப்பிட்டார்.

நிலக்கரி இறக்குமதிக்கான விலைமனு கோரப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் நினைவேந்தல்







(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48 ஆவது நினைவேந்தல் இன்று காலை 10 மணியளவில் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த மாநாட்டில் கொல்லப்பட்டவர்களில் நினைவாக, யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் நினைவஞ்சலி நடத்தப்பட்டது.

இதன்போது அரசியல் கட்சி பிரதிநிதிகள், பொது மக்கள் கலந்துகொண்டு அஞ்சலியைச் செலுத்தினர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் விருந்துபசார வைபவத்தின் போது வன்முறைக் கும்பலால் நடத்தப்பட்ட தாக்குதலில் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த 11 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மலர்வளையக் கட்டணமும் இலங்கையில் அதிகரிப்பு



இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்டத் தடையையடுத்து இலங்கையில் மலர் வளர்ப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மலர் வளர்ப்பாளர்களும் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக மலர்களைப் பெருமளவில் ஏற்றுமதி செய்தவர்கள்கூட தற்போத கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். அதுமட்டுமல்ல ☞2

# கோட்டாபய அரசு கவிழ்வது உறுதி



## அது எப்போது என்று இப்போது கூறமுடியாது என்கிறார் விமல்

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தற்போது பயணிக்கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ்வது எப்போது என்று இப்போது கூற முடியாது.**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.** ☞2

## பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ; சாரதி உட்பட மூவர் படுகாயம்



ஹப்புத்தளை-வெலிமடை பிரதான பாதையில் ஓட்டோ ஒன்று பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து இன்று காலை இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ பலத்த சேதங்களுக்குள்ளாகியதுடன், உயிர் ஆபத்துக்கள் எதுவும் இடம் பெறவில்லை.

எனினும், ஓட்டோவில் பயணித்த சாரதி உட்பட ☞2

## உலக சாதனை மாணவன் கௌரவிப்பு



ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட "WISDOM' திறந்த வகுப்பறை கட்டடத் தொகுதியின் முதற்கட்டம் கல்லூரியின் ஆரம்பப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டு கல்லூரி நிர்வாகத்துக்கு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது. இதன்போது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்த ஹற்றன் ☞2

## கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் பரிதாப மரணம்!

(ந.லோகதயாளன்)

யாழ். ஊர்காவற்றுறையில் சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளான்.

ஊர்காவற்றுறை - நாரந்தனை வடக்கில் நேற்று குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் விஜயேந்திரன் ஆரணன் (வயது 4) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான். சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது - சிறுவனின் தந்தை ☞2

# தேசிய அரசுக்கு ஐ.தே.க. பச்சைக்கொடி!



## ரணில் தலைமை தாங்கவும் தயார் என அறிவிப்பு

நல்லெண்ண அடிப்படையில் தேசிய அரசு அமைந்தால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கும்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவை வருமாறு :-

தற்போதைய சூழ்நிலையில் தேசிய அரசொன்றை அரசு அமைத்தால் அதற்கு எதிரணிகளின் ஒத்துழைப்பையும் பெறலாம். அவ்வாறு அமையும் தேசிய அரசுக்கு தலைமை வழங்குவதற்கு ரணில் தயாராகவே இருக்கின்றார்

பொருளாதாரப் பிரச்சினையால் நாட்டிலுள்ள வளங்களை இந்த அரசு விற்பனை செய்து வருகின்றது. அரசு வசமுள்ள தங்க இருப்பும் குறைவடைந்துள்ளது.

பொருளாதாரப் பிரச்சினைக்கான தீர்வுகள் இவை அல்ல. உரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அதற்கான யோசனைகள் ஐக்கிய தேசியக்கட்சி வசம் உள்ளன - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# ஜோகோவிச் விசா ரத்துச் செய்யப்பட்டமைக்கு ஆஸ்திரேலிய நீதிமன்றம் தடை வழங்கியது

டென்னிஸ் உலகின் முதல் நிலை வீரரும், 9 முறை ஆஸ்திரேலிய ஓபின் பட்டத்தை வென்ற வருமான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஜனவரி 17 ஆம் திகதி தொடங்கவுள்ள ஆஸ்தி ரேலிய ஓபின் டென்னிஸ் தொடரில் பங்கேற் பதற்காக விமானம் மூலம் கடந்த புதன்கிழமை மெல்போர்ன் சென்றிருந்தார்.

அவர், தான் கொரோனாத் தடுப்பூசி செலுத்தி க்கொண்டாரா, இல்லையா என்ற விபரத்தை வழங்க மறுத்திருந்ததாலும், அவரிடம் வைத்திய விதிவிலக்குப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் இல்லாததாலும் ஆஸ்திரேலியா விற்குள் நுழைய அதிகாரிகள் அனுமதி மறுத்தி ருந்தனர்.

அவரது விசாவினையும் ஆஸ்திரேலிய அரசு ரத்துச் செய்தது.

இதனால் ஜோகோவிச் மெல்போர்ன் விமான நிலையத்தில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. விசாரத்துச்செய்யப்பட்டதால் வியாழக் கிழமை முதல் ஜோகோவிச் தங்கும் விடுதி யொன்றில் தனிமைப்படுத்தல் காவலிலும் வைக்கப்பட்டார்.

விசா ரத்துக்கு எதிராக மெல்போர்னில் உள்ள நீதிமன்றத்தில் ஜோகோவிச் தரப்பில் வழக்கு ஒன்று தொடரப்பட்டு, முறையீடு செயவதற்கான 11 காரணங்களையும் ஜோகோவிச்சின் வழக்கறிஞர்கள் சமர்ப்பித்திருந்தனர். டிசம்பரில் ஜோகோவிச்சிற்கு கடுமையான நோய்த்தாக்கம் எதுவும் இருந்ததாக எந்தத் தரவும் இல்லை என்றும், அது தொடர்பாக அவரிடம் நடத்தப்பட்ட சோதனை முடிவுகளையும் நீதிமன்றத்தில் அவர்கள் வழங்கியிருந்தனர்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி அந்தோனி கெல்லி, ஜோகோவிச்சின் விசாவை ரத்துச் செய்த உத்தரவிற்குத் தடை விதித்தார். நீதிமன்ற வழக்கில் டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச்சுக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கிடைத் துள்ளதன் மூலம், ஆஸ்திரேலிய ஓபின் டென்னிஸ் தொடரில் அவர் பங்கேற்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

# மூத்த வீரர்களை எச்சரிக்கிறார் முன்னாள் வீரர் ஹர்பஜன் சிங்

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து டெஸ்ட் தொடரில் தற்போது பங்கேற்று வருகிறது. முதல் டெஸ்டில் இந்தியாவும், இரண்டாவது டெஸ் டில் தென்னாபிரிக்காவும் வெற்றி பெற்றுள்ளதனால், டெஸ்ட் தொடர் 1-1 என்று சமநிலையில் உள்ளது.

இந்திய அணியின் மூத்த வீரர்களான புஜாரா, ரஹானே ஆகியோர் கடந்த சில டெஸ்ட் போட்டிகளில் பிரகாசிக்கத்தவறி வருவதனால், விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் குறித்து இந்திய அணியின் முன்னாள் வீரரான ஹர்பஜன் சிங் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜோகன்னஸ்பேர்க் டெஸ்ட்டில் நடந்த ஒரே நல்ல விடயம் ரஹானே ஓரளவு சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியதுதான். அவர் அரைச்சதம் அடித்துள்ளதால் நாளை நடைபெறவுள்ள கேப்டவுன் டெஸ்டில் வாய்ப்புப் பெறுவார். கோலி அணிக்கு திரும்புவதால் ரஹானே நீக்கப்படமாட்டார் என்றே கருதுகி றேன்.

ரஹானே பெரிய அளவில் ஓட்டங்களைச் சேர்க்க வேண் டும் என நான் விரும்புகிறேன். அவர் அரைச்சதங்களை சதங் களாக மாற்ற வேண்டும். மூத்த வீரர்களான ரஹானே மற் றும் புஜாராவின் கழுத்துகளின் மீது கத்தி தொங்குகிறது. அப் படிப்பட்ட சூழலிலும் கடந்த போட்டியில் இருவரும் நன்றாக விளையாடியுள்ளனர், என ஹர்பஜன் சிங் தெரிவித்துள் ளார்.



## உலக சாதனை மாணவன் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹைலண்ட்ஸ் கல்லூரியின் மாண வன்லவனிஷ்பாராட்டிக்கௌரவிக்கப்பட் டார்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் அதி பரும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமான ஶ்ரீதர், ஹட்டன் ஹை லண்ட்ஸ் கல்லூரியின் முன்னாள் அதி பரும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளரு மான விஜேயசிங், ஹட்டன் வலயக் கல்விப் பணிமனையின் கோட்டக் கல்வி பணிப்பாளரும் கல்லூரியின் பழைய மாணவியுமான இலட்சுமி பிரபா செல் வேந்திரன், கல்லூரியின் பழைய மாண வர் சங்கத்தின் பொதுச்செயலாளர் அர் ஜுன் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கோட்டாபய அரசு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தற்போது எதிர்நோக்கும் அரசி யல் நெருக்கடி தொடர்பில் ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராஜாங்க அமைச்சர்களையோ அல்லது அமைச்சர்களையோ பதவி நீக்கம் செய்வதால் அல்லது அமைச்சுக் களின் பொறுப்புக்களை கைமாற்றம் செய்வதால் அரசின் நெருக்கடியைத் தீர்க்க முடியாது.

நாடு பொருளாதார வீழ்ச்சியைச் சந் தித்துள்ள இன்றைய நிலைமையில் மக் களின் மனதை வெல்லும் வகையில் அரசு செயற்பட வேண்டும் என்பதே பங் காளிகளான எமது நோக்கம். இதற்கா கவேநாம்உள்ளுக்குள்இருந்துகொண்டு பாடுபடுகின்றோம். வெளியாட்களுடன் சேர்ந்து அரசை வீழ்த்துவது எமது நோக்கமல்ல.

எனினும், அரசு தற்போது பயணிக் கும் பாதையில் மாற்றத்தை ஏற்படுத்தா விட்டால் கவிழ்வது உறுதி. ஆனால், இந்த அரசு வீழ்வது எப்போது என்று இப் போது கூற முடியாது. அரசின் நகர்வுக ளைப் பொறுத்தே அதன் முடிவு தங்கியி ருக்கும்.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து - ஆழமாக ஆலோசித்து நாட்டுக்கும் மக் களுக்கும் பயனுள்ள சிறந்த தீர்மானங் களை எடுக்க வேண்டும் - என்றார்.

## பள்ளத்தில் பாய்ந்தது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவருக்குப் படுகாயங்கள் ஏற்பட்டுள் ளன.

இந்த விபத்து குறித்து ஹப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

## கிணற்றில் தவறி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத்தில் வேலை செய்துகொண் டிருந்த நிலை யில், கிணற்றின் அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் காணாமல் போயுள்ளான். இதையடுத்து பெற்றோர் தேடிய நிலையில், சிறுவன் கிணற்றில் சடலமாகக் காணப்பட்டுள் ளான்.

இந்தச்சம்பவம்தொடர்பில்ஊர்காவற் றறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங் கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண் டதுடன் சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்ப டைத்தனர்.

## மலர்வளையக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுப நிகழ்வுகளுக்கு மலர் பந்தல் அமைப் பதற்கான கட்டணமும் தற்போது அதி கரித்துள்ளது.

அதேவேளை, உயிரிழந்தவர்க ளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகக் கொண்டு செல்லப்படும் மலர் வளை யங்களின் கட்டணமும் அதிகரித்துள்ளது எனச் சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

# ஐக்கிய மக்கள் சக்தியின் நல்லூர் தொகுதி பொதுக் கூட்டம்

## எதிர்க்கட்சித் தலைவரும் பங்குபற்றுவார்

ஐக்கிய மக்கள் சக்தியின் நல்லூர் தொகுதி பொதுக் கூட்டம் அந்தத் தொகுதி பொதுக் கூட்டம் அந்தத் தொகுதி அமைப் பாளர் கிருபாகரன் தலைமையில் நாளை (புதன்கிழமை) முற்பகல் 10 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந் துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமாகிய சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டு நாட்டின் எதிர்காலம் தொடர்பில் கருத்துரைக்க உள்ளார்.

# இளங்கலை மாணவர் ஆய்வரங்கு யாழ். பல்கலையில் தொடங்கியது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்க ளுக்கான முதலாவது ஆய்வரங்கு இன்று காலை ஆரம்பமாகியது. யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேரா சிரியர் கே. சுதாகர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இன்று காலை இடம்பெற்ற அங்குரார் பண நிகழ்வின் திறவுரைகளை அமெ ரிக்காவின் ஸலிபெரி பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். ஜ. கீதபொன்கலன், கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத் தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி சாந்தி செகராஜசிங்கம் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவரும் தகைசார் பேரா சிரியருமான பேராசிரியர் வ. மகேஸ் வரன் மற்றும் இலங்கை கிழக்குப் பல் கலைக்கழகத்தின் நுண்கலைத் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி. எஸ். ஜெயசங்கர் ஆகியோர் நிகழ்த்தினர்.

மாலை அமர்வில் பன்னிரு ஆய்வுத் தடங்களில் ஆய்வுக் கட்டுரைகள் முன் வைக்கப்பட்டன. இவ் ஆய்வுத் தடங்க ளுக்குத் துறைசார் பேராசிரியர்கள் தலைமை தாங்கினர்.





சமத்துவம், சமநீதி மற்றும் அபிவிருத் திக்கான மானுடவியல் சமூக விஞ்ஞா னம் எனும் தொனிப்பொருளுடன் முன் னெடுக்கப்படும் இந்த ஆய்வரங்கில் கடந்த வருடம் கலைப் பட்டதாரிகளாக வெளியேறிய சுமார் 100 மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட வுள்ளன.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தடுப்பூசி சுவீகரிப்பு நிறைவு

இலங்கை உட்பட உலக நாடுகள் அனைத்தையுமே ஆட்டிப்படைக்கும் கொரோனா நெருக்கடிப் பேரிடர் தன் கைவரிசையை இரண்டாவது வெற்றி வருடம் கடந்து தீர்க்கமாக முன்னெடுத்துச் செல்கின்றது. ஆயினும், அதன் தாக்குதல் வீரியம் குறைந்து இருப்பதாகத் தெரியவில்லை.

பெரும் பொருளாதார இக்கட்டில் சிக்கியிருக்கும் இலங்கை, காலதாமதமாகவேனும் நெருக்கடியை எதிர் கொள்வதற்குத் தன்னை சுதாகரித்து எழுந்து நின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆரம்பத்தில் தடுமாற்றம் கண்டாலும் – தேவையற்ற தாமதங்கள், மெத்தனப்போக்குகள் பின்பற்றப்பட்ட போதிலும் – குறுகிய காலத்தில் கொவிட் தொற்றுப் பேரிடரை எதிர்கொள்ளச் சாத்தியமான சகல வழிகளிலும் தன்னைத் தூக்கி நிறுத்தியது இலங்கை என்பது பெருமைப்படக் கூடிய விடயமே.

இதற்கு முக்கிய காரணம் கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதில் ஆரம்பத்தில் காட்டிய சுறுசுறுப் பின்மையை மாற்றி, அதை வேகப்படுத்திய பிந்திய நடவடிக்கைதான்.

கொவிட் தொற்று 2019 இறுதியிலேயே பரவ ஆரம்பமாகி விட்டது அதனால்தான் அதற்கு பெயரே கொவிட்–19 என்று அமைந்தது.

அதனை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் இரண்டாக அடையாளம் காணப்பட்டன.

ஒன்று – மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களை ஒழுங்குபடுத்துவது. அதில், சமூக இடைவெளியைப் பேணுதல், மக்கள் ஒன்று கூடுவதைத் தடுத்தல், முகக் கவசம் அணிதல், அடிக்கடி தொற்று நீக்கிகள் மூலம் கைகளைக் கழுவுதல், பொது முடக்கத்தைப் பேணுதல் போன்ற கட்டுப்பாடுகள் அடங்கின.

அடுத்தது – தடுப்பூசியைப் பெற்று மக்களுக்கு அவற்றை வழங்குவது. அதன் மூலம் புதியவர்கள் தொற்றுக் காவிகளாக மாறுவதைத் தடுத்து, வைரஸ் பரம்பலைக் கட்டுபடுத்துவது.

2019 இல் உலகில் அறிமுகமான கொரோனா வைரஸ் 2020 முடிவில்தான் இலங்கையில் காலூன்றத் தொடங்கியது.

ஆரம்பத்தில் சமூகப் பழக்க வழக்கங்களைக் கட்டுப் படுத்துவதன் மூலம் கொரோனாப் பரவலைக் கட்டுக்குள் வைத்திருப்பதில் தீவிரம் காட்டிய அரசு, தடுப்பூசி சுவீகரிப்பில் ஈடுபாடும், ஆர்வமும், வேகமும் காட்டவில்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும்.

அன்றைய பொருளாதார நெருக்கடி இக்கட்டில், இத்துணை மில்லியன் கொரோனாத் தடுப்பூசிகளுக்காகப் பல கோடி டொலர்களை எங்கே பெறுவது என்ற மலைப்பு இதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

2020இல் இலங்கையின் பரவிய கொரோனா வைரஸ் அந்த ஆண்டிலேயே பல கொத்தணிகளாக இலங்கையில் காலூன்றிய பின்னர், 2021 ஜனவரியில்தான் கொரோனாத் தடுப்பூசி இறக்குமதிக்கான தீவிர நிலைப்பாட்டை எடுத்துச் செயற்படுத்தக் களத்தில் இறங்கியது அரசு.

இப்போது இந்த ஜனவரிக்குள் போதுமான அளவு தடுப்பூசிகளை இறக்குமதி செய்து சுவீகரித்து விட்டோம் என அரசு அறிவித்திருக்கிறது.

28 லட்சம் அஸ்ட்ரா செனிக்கா, 15 லட்சம் மடோனா, 2 லட்சம் ஸ்புட்னிக், 2 கோடியே 60 லட்சம் சினோபாம், ஒரு கோடியே 80 லட்சம் பைஸர் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப் பட்டுள்ளன, சீனாவிடமிருந்துதான் பெருமளவு ஊசி கிட்டியது. ஜப்பான் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளும் உதவியுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட – சுவீகரிக்கப்பட்ட – ஒவ்வொரு தடுப்பூசிக்கும் ஐந்து முதல் ஏழரை டொலர் உதவியை உலக சுகாதார ஸ்தாபனம் இலங்கைக்கு வழங்கியுள்ளது. சினோ பார்ம் தடுப்பூசி பெறுவதற்கான கடனுதவியை உலக வங்கி யும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் தந்து உதவியுள்ளன. இப்போது செயலூக்க (பூஸ்டர்) தடுப்பூசியை நான்காவது 'டோஸாகவாவது' ஏற்றுவது குறித்து அரசு சிந்திக்கின்றது.

தடுப்பூசி சுவீகரிப்பு விடயத்தில் அரசின் முயற்சி காலதாமதமாக ஆரம்பிக்கப்பட்டது எனினும், அதில் நிறைவு காணும் இலக்கை ஒரு வருடத்துக்குள் – இவ்வளவு வேகமாக– ஒப்பேற்றியமைக்காக சம்பந்தப்பட்டோரைத் பாராட்டுவது தகும்.

# தனது ஆட்சியில் வெளிநாட்டு கடன் வாங்கவில்லை ஜனாதிபதி கோட்டா கூறுகின்றமை சிரிப்பாகவுள்ளது

## மனோ காட்டம்



'தனது ஆட்சியில் வெளிநாட்டு கடன் வாங்கவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறுகின்றமை சிரிப்பாக உள்ளது' என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் மேலும் தெரிவித்துள்ள அவர் கூறியமை வருமாறு–

தனது ஆட்சியில் வெளிநாட்டு கடன் வாங்கவில்லை என ஜனாதிபதி கோட்டாபய கூறுகின்றமையைக் கேட்டு சிரிப்பு வருகிறது.

ஓர் உதாரணம், பங்களாதேஷிடம் கடன் வாங்கிவிட்டு, தற்போது திருப்பி செலுத்தும் காலத்தை கெஞ்சி நீடித்து விட்டு, கடனே வாங்கவில்லை என்கிறார்.

இதையும் நாம் 'கடனே' என கேட்டு தொலைக்க வேண்டியிருக்கிறது. இவரது அண்ணன் ராஜபக்ஷ கடன் வாங்கி, நாட்டுக்கு பிரயோசனமற்ற திட்டங்களில் போட்டு, நாசமாக்கினார்.

அந்த பெருங்கடனைத்தான் இன்று முழு நாடும் வட்டி, குட்டி என இப்போ கட்டித் தொலைத்துக் கொண்டிருக்கிறோம்.

இதில், நான் கடன் வாங்கவே இல்லை என வாக்கு மூலம் வேறு…!' என அவர் மேலும் பதிவிட்டுள்ளார்.

# 10இற்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ள இளைஞன் யாழில் கைது

கோப்பாய் மற்றும் கொக்கு விலில் வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார். பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 26 வயதுடைய கொலின் என்ற சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபரிடமிருந்து கூரிய ஆயுதம் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

கடந்த நவம்பர் 23 ஆம் திகதி கோப்பாய் மற்றும் கொக்குவில் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்த வாள்வெட்டு வன்முறைக் கும்பல் அடாவடியில் ஈடுபட்டுத் தப்பித்தது.

சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் மானிப்பாய் புதுமடத்தைச் சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றங்களில் பத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ள என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஒமிக்ரோன் திரிவை அடையாளம் காணும் பரிசோதனைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும்

நாட்டில் ஒமிக்ரோன் திரிவை அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு மற்றும் மத்தியக் குழுவின் உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். தற்போது ஒமிக்ரோன் தொற்று உறுதியானவர் சமூகத்தில் இருப்பதற்கான சாத்தியம் நிலவுவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.



# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி பொலிஸிடம் மாட்டிய 33 அழகிகள்!

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி கடவத்தையில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற விருந்தொன்றை பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

களனி பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 3 மணியளவில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சோதனையின் போது, ஹோட்டலில் 33 பெண்கள் இருந்தனர் எனவும், அவர்கள் அனைவரும் பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் காவலில் வைக்கப்பட்ட பெண்கள் அனைவரும் மஹர நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். கடவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# நியூயோர்க் அடுக்குமாடி குடியிருப்பில் பாரிய தீ

## 19 பேர் பலி

நியூயோர்க் நகரத்தின் தி பிராங்க்ஸ் பரோவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தில் நேற்று ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 09 சிறுவர்கள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர். அத்துடன் டசின் கணக்கானவர்கள் காயமடைந்தனர் என நியூயோர்க் நகர மேயர் எரிக் ஆடம்ஸ் தெரிவித்தார்.

கட்டடத்தில் இருந்த ஹீட்டர் ஒன்றில் இருந்து தீ பரவி இருக்கலாம் எனக் கூறிய அவர், இது அளவிட முடியாத சோகம் எனக் குறிப்பிட்டார். கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் இருந்து தீ பரவத் தொடங்கி கட்டடம் முழுவதும் பரவியது என அதிகாரிகள் தெரிவித்தனர்.


பலர் தீயில் கருகி உயிரிழந்ததுடன், மேலும் சிலர் புகை காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறந்ததாக நகரின் தீயணைப்புத் துறை ஆணையர் டேனியல் நிக்ரோ செய்தியாளர்களிடம் கூறினார்.

கட்டத்தில் உள்ள வீடொன்றின் படுக்கை அறையில் உள்ள ஒரு சிறிய மின்சார ஹீட்டரில் இருந்து தீ பரவி இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்காக அமைக்கப்பட்ட நகரப் பகுதி அடுக்குமாடிக் குடியிருப்புகளின் பாதுகாப்புத் தரங்கள் குறித்த கேள்வியை எழுப்பியுள்ளது.

கடந்த புதன்கிழமை அதிகாலை பிலடெல்பியாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடத்தில் தீ பரவியதில் 08 சிறுவர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்த நிலையில் இந்த வாரம் அமெரிக்காவில் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் ஏற்பட்ட இரண்டாவது பெரிய தீ விபத்தாக நேற்றைய சம்பவம் பதிவாகியுள்ளது.

# நெல்சன் மண்டேலா இருந்த சிறைச்சாவி ஏலம் நிறுத்தம்




நிறவெறிக்கு எதிராகப் போராடிய தலைவர் நெல்சன் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறையினுடைய சாவியின் ஏலம் நிறுத்தப்பட்டுள்ளது.

தென் ஆப்பிரிக்காவில் நிலவிய நிறவெறிக்கு எதிராகப் போராடி 27 ஆண்டுகள் சிறையில் இருந்தவர் நெல்சன் மண்டேலா. இந்த 27 ஆண்டுகளில் 18 ஆண்டுகள் ரோபன் தீவில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சில தினங்கள் முன் அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் செயற்பட்டு வரும் கர்ன்சே என்கிற ஏல நிறுவனம், வரும் 28ஆம் திகதி மண்டேலா தங்கியிருந்த சிறை அறையின் சாவி ஏலம் விடப் படும் என்று அறிவித்தது.

மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறைக்கு காவலராக இருந்த கிறிஸ்டோ பிராண்ட் என்பவர் மூலம் இந்த சாவி ஏலம் விடப்பட இருந்தது. சாவியுடன் நெல்சன் மண்டேலா தன் கைகளால் வரைந்த 'திலைட் ஹவுஸ்' என்னும் ஒரு ஓவியம் மற்றும் அவர் பயன்படுத்திய ஒரு சைக்கிள் போன்ற சில பொருள்களும் ஏலம் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்மூலம் கிடைக்கும் வருமானம் மண்டேலாவின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள அவரது சொந்த கிராமத்தில் நினைவுத் தோட்டம் அமைக்க பயன்படுத்தப்படும் என்று நிறுவனம் அறிவித்தது.

இந்த ஏலத்துக்கு தென் ஆப்பிரிக்கா கடுமையான எதிர்ப்பை பதிவு செய்தது. சிறைச் சாவி தென்னாப்பிரிக்க மக்களுக்குச் சொந்தமானது. அந்தச் சாவி தென் ஆப்பிரிக்காவின் வலி நிறைந்த வரலாற்றை வெளிப்படுத்தும் அடையாளம். மேலும், தென் ஆபிரிக்கா சந்தித்த மிகப்பெரிய சுதந்திர போராட்டத்தின் ஆதாரம் அது. அந்தச் சாவியின் உரிமை தென் ஆப்பிரிக்க மக்களுக்கே இருக்கிறது. எனவே, அது எங்கள் கைகளுக்கு வரவேண்டும் என்று தென் ஆபிரிக்க கலாசார அமைச்சர் நாதி தெத்வா தங்களின் எதிர்ப்பை பதிவு செய்துள்ளார்.

இதனிடையே, நீண்ட சர்ச்சைகளுக்குப் பிறகு இந்த ஏலம் நிறுத்தப்பட்டுள்ளது. 'சிறைச்சாலை சாவி அரசின் அனுமதி இல்லாமல் வெளியே கொண்டுச் செல்லப்பட்டுள்ளது' எனத் தென் ஆப்பிரிக்க அரசு, அமெரிக்க நிறுவனத்திடம் தெரிவித்ததை அடுத்து, ஏலத்தை நிறுத்திவைக்க அந்நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது



# பாகிஸ்தானில் பனிப்பொழிவு; 21 பேர் பரிதாபச் சாவு!

பாகிஸ்தான் நாட்டில் உள்ள பஞ்சாப் மாகாணத்தின் முர்ரி மற்றும் அதற்கு அருகில் உள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவு காரணமாக, வாகனங்களில் சிக்கி, குறைந்தது 21 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என, மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் முர்ரி மலைப்பிரதேசம், குளிர்காலங்களில் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.

இந்நிலையில், பஞ்சாப்பின் முர்ரி மற்றும் அதற்கு அருகில் உள்ளபகுதிகளில் ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவு காரணமாக, குறைந்தது 21 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என, மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடும் பனிப் பொழிவு காரணமாக, தங்கள் கார்களுக்குள் பயணிகள் இருந்த நிலையில், மூச்சுத் திணறல் ஏற்பட்டதே இவர்களின் இறப்புக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

போக்குவரத்துத் தடையால் அப்பகுதிக்குச் செல்லும் வழியில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கடும் பனிப்பொழிவு ஏற்பட் டுள்ள பகுதிக்குச் செல்ல சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத் – முர்ரி நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது. முர்ரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு அவசர நிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீட்புப் பணிகளில் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைகள் ஈடுபட்டுள்ளன.

# சுற்றுலாப் பயணிகள் மீது விழுந்த இராட்சத பாறை

தென்கிழக்கு பிரேசிலிலுள்ள ஃபர்னாஸ் ஏரிக்கு சென்ற சுற்றுலா பயணிகள் மீது இராட்சத பாறை விழுந்த கோர விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளனர். 20 பேர் மாயமாகியுள்ளதாக வும், 32 பேர் பலத்த காயமடைந்தனர் என மீட்பு பணிகளில் ஈடுபட்டு வரும் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

வார இறுதி நாளையொட்டி ஃபர்னாஸ் ஏரிக்கு 3 படகுகளில் சென்ற சுற்றுலா பயணிகள் மீது ராட்சத பாறை விழுந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.





# 3 ஆண்டுகளுக்குப் பின்னர் சவூதி இளவரசி விடுதலை

மூன்று ஆண்டுகளாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சவூதி அரேபிய இளவரசி பாஸ்மாவும் அவரது மகளும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களது விடுதலைக்காகப் போராடியவர்கள் இந்தத் தகவலை உறுதி செய்திருக்கிறார்கள். 2019-ஆம் ஆண்டு சுவிட்ர்லாந்துக்கு சிகிச்சைக்கு செல்வதற்காகத் திட்டமிட்டிருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் அவர்கள் ஏன் கைது செய்யப் பட்டனர் என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை. எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. அரசியல் சட்ட சீர்திருத்தம் மற்றும் மனிதநேய விவகாரங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டதால் அவர் கைது செய்யப்பட் டிருக் கலாம் என பலரும் கருதினர்..

# தமிழகத்தில் தொழில்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ஸ்டாலின் தகவல்



சென்னையில்புதியதொழில் முனைவோருக்கான கருத்தரங்கில் கலந்துகொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றியபோது, இந்தியாவில் 100 சிறந்த கல்வி நிறுவனங்களில் 30 நிறுவனங்கள் தமிழகத்தில் உள்ளன என்றும் கடந்த ஆண்டு 60 நிறுவனங்கள் 1.8 மில்லியன் டொலர் மதிப்பில் முதலீடு செய்துள்ளதாகவும், தொழில்துறையை மேம்படுத்த பல்வேறு ஆக்கப்பூர்வ பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இந்தப் புதிய தொழில் திட்டத்தை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, சிறுநிறு வனங்கள் முதலீட்டில் தமிழகம் முன்னோடி மாநிலமாக உள் ளது என்றும் கல்வி, பொருளா தாரத்தில் தமிழகம் சிறந்து விளங்குவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

பெருந்தொற்றால் தொழில் நிறுவனங்கள் மாறியுள்ளன. உலகின் போக்கை நிர்ணயிக்கிற முக்கிய சக்தியாக தொழில்நுட்பம் விளங்குகிறது. தமிழகத்தில் கணினிப் புரட்சியை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி. மாற்றுச் சிந்தையுள்ள அரசாக தமிழக அரசு திகழ்கிறது. தொழில் வளர்ச்சியை நீதியின் அளவுகோலாக நாம் பார்க்கிறோம், என்றும்தனதுஉரையின்போது தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.



# ஜல்லிக்கட்டு போட்டி நடத்த அனுமதி

## தமிழகத்தில் அரசாணை வெளியானது

ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகை நாளன்று அவனியாபுரத்திலும், மறுநாள் பாலமேட்டிலும், அதற்கு அடுத்த நாள் அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டு நடத்தப்படுவது வழக்கம். இதில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலக புகழ் பெற்றது. இந்த ஜல்லிக்கட்டை காண வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் உற்சாகமாக வருவதுண்டு.

இந்த ஆண்டு கொரோனா தொற்று பரவல் காரணமாக பல்வேறு கட்டுப்பாடுகளை அரசு விதித்துள்ளது. இதனால் ஜல்லிக்கட்டு நடைபெறுமா? என சந்தேகமிருந்தாலும் ஜல்லிக்கட்டு போட்டிக்கான ஏற்பாடுகள் மும்முரமாகவே நடைபெற்று வருகின்றன. அலங்காநல்லூரில் வாடிவாசல் அருகே உள்ள முத்தாலம்மன் கோவில் முன்பாக ஜல்லிக்கட்டுக்கான முகூர்த்தகால் நடும் நிகழ்ச்சியும் இன்று அதிகாலை நடைபெற்றுள்ளது..

இந்த நிலையில் கட்டுப்பாடுகளுடன் ஜல்லிக்கட்டு போட்டி நடத்த அனுமதி அளித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அதில், 300 மாடுபிடி வீரர்களைக் கொண்டு ஜல்லிக்கட்டு போட்டி நடத்தலாம் என்றும் 2 தவணை தடுப்பூசிகளையும் செலுத்திய வீரர்கள் மட்டும் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் 2 நாள்களுக்கு முன்பு அனைத்து வீரர்களுக்கும் கொரோனா பரிசோதனை செய்யவேண்டும் எனவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பிரதமர் பாதுகாப்பில் ஏற்பட்ட சிக்கல் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது

கடந்த வாரம் பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூரில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்பில் சிக்கல் நிலை நிலவியதாக முறைப்பாடு கூறப்பட்டது. பிரதமரின் பயண வழித் தடத்தில் ஏற்பட்ட பாதுகாப்பு சிக்கல் தொடர்பாக பஞ்சாப் அர சும், மத்திய அரசு தனித் தனி யாக விசாரணைக் குழுக்களை அமைத்துள்ளன.

இந்தப் பிரச்சினை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு விசாரணையை நிறுத்தி வைக்குமாறு மத்திய அரசுக்கும், பஞ்சாப் அரசுக்கும் உச்சநீதிமன்ற உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், உச்சநீதிமன்றத்தில் இன்று மீண்டும் பிரதமர் பாதுகாப்புச் சிக்கல் தொடர்பான வழக்கின் விசாரணை நடைபெற்றது.

அப்போது இந்திய மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துூர் மேத்தா, இந்திய மத்திய அரசு அமைத்துள்ள விசாரணைக் குழு இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து நீதிமன்றத்தில் அறிக்கை அளிக்கும் என்று தெரிவித்தார்.

பிரதமர் பாதுகாப்பு சிக்கல் தொடர்பான பிரச்சினையை விசாரிக்க முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் சுயேட்ச்சையான விசாரணை குழுவை அமைக்கவும், இந்த குழுவில் சண்டிகர் டிஜிபி , தேசிய புலனாய்வு முகமையின் ஐஜி , பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றப் பதிவாளர் ஜெனரல் மற்றும் பஞ்சாப் ஏ.டி.ஜி.பி. ஆகியோரை சேர்க்கவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த விவகாரத்தில் மத்திய, பஞ்சாப் அரசுகள் விசா ரணை நடத்த வேண்டியதில்லை என்றும் உச்சநீதிமன்றம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

## தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பில் முறைகேடு

# எடை குறைவு, தரமற்ற பொருள்களால் மக்கள் அதிர்ச்சி



தைப்பொங்கல் பண்டிகையை பொது மக்கள் கொண்டாடும் நோக்கில், 21 பொருட்கள் கொண்ட பொதிகள் நிவாரணக் கடைகள் மூலம் இலவசமாக வழங்கப்படும் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

அதன்படி தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நிவாரணக்கடைகளிலும் 21 பொருள்கள் அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டு வருகிறது. கரும்பு, பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், பாசிப்பருப்பு, நெய் போன்ற பொருள்களும், பண்டிகைக் கால சமையலுக்குத் தேவையான மஞ்சள் தூள், மிளகாய் தூள், மல்லித் தூள், கடுகு, சீரகம், மிளகு, புளி, கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, கோதுமை மா, உப்பு ஆகிய மளிகைப் பொருள்களும் அடங்கிய துணிப் பைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் இந்தத் திட்டத்திற்காக 1,088 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது இந்தநிலையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் வழங்கப்பட்டு வரும் 21 பொருள்களில், ஒருசில பொருள்கள் தரமற்ற நிலையில் இருப்பதாக நிவாரண அட்டைதாரர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மேலும், பொருள்களின் எடையும் குறைவாக இருப்பதாகவும், 21 பொருட்களுக்கு மாறாக 18 பொருள்களே உள்ளன என ரேஷன் அட்டைதாரர்கள் தெரிவித்திருக்கின்றனர். கோதுமை மா உள்ளிட்ட பொருள்களில் வண்டு கள் இருக்கின்றன எனவும், வெல்லம் தரமானதாக இல்லைஎன்றும்அவர்கள்முறையிட்டுள்ளனர்.

பொதுமக்களுக்கு வழங்கப்படும் பொருள்களில் குறைகள் இருப்பதால் மக்களுக்கும் நிவாரணக் கடை ஊழியர்களுக்குமிடையில் பிரச்சினை எழுகிறது. இந்த மாதிரியான தகராறுகளை குறைப்பதற்காக அரசு வழங்கும் 21 வகையான பொங்கல் பரிசுப் பொருள்கள் எந்த குறைபாடும் இல்லாமல் நிவாரணக் கடைகளுக்கு விநியோகிக்கப்பட்டால் எந்த மனக்கசப்பும் வராது என பொது மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் மாவட்ட வட்ட வழங்கல் அதிகாரியை தொடர்பு கொண்டு கேட்கும் பொழுது வருவாய்த்துறை அதிகாரிகளுடன் இணைந்து குழுக்கள் அமைத்து, எடை குறைவாக வழங்கப்படும் கடைகளில் உரிய ஆய்வு மேற்கொண்டுநடவடிக்கைமேற்கொள்ளப்படும் என உத்தரவாதம் அளித்துள்ளார்.



# பல்லின சமூகத்தின் இன நல்லிணக்கம் நூல் வெளியீடு

வாழைச்சேனை எம்.ஐ.எம்.நவாஸ் எழுதிய பல்லின சமூகத்தின் இன நல்லிணக்கம் நூல் வெளியீட்டு விழா அந் நூர் தேசியபாடசாலை பிரதான மண்டபத்தில் கடநங்த சனிக்கிழமை இடம்பெற்றது.

பல்லின சமூகத்தின் இன நல்லிணக்கம் நூலின் முதற் பிரதி பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில் மற்றும் நூலாசிரியரின் தாயாருக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

இவ் விழாவில் நூலின் நயவுரையை கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம்.றிஸ்வி நடாத்தியதுடன் வாழ்த்துரையை அதிபர் எச்.எம்.எம். இஸ்மாயில் நடாத்தியதுடன் ஏற்புரையையும் நன்றியுரையையும் எம்.ஐ.எம்.நவாஸ் வழங்கினர்.

# சட்டவிரோதமாக கசிப்பு விற்பனை இரண்டு பெண்கள் அதிரடியாக கைது

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள தாண்டியடி புதுமண்ட பத்தடியிலுள்ள பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு மற்றும் அரச மதுபானங்களை விற்பனையில் ஈடுபட்டு வந்த இரு வீடுகளை பொலிஸார் நேற்று முன்தினம் முற்றுகையிட்டு இரு பெண்களான தாயும் மகளையும் கைது செய்ததுடன் கசிப்பு மற்றும் மதுபானப் போத்தல்களை மீட்டுள்ளனர் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை அருகருகே உள்ள இரு வீடுகளை முற்றுகையிட்டனர் இதன் போது ஒரு வீட்டில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவரை 5 லீற்றர் கசிப்புடன் கைது செய்ததுடன். அருகிலுள்ள வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் அரச மதுபானங்களை வைத்து சட்டவிரோதமாக வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவரை 10 போத்தல் மதுபானங்களுடன் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட இருவரும் தாயும் மகளும் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

# 16 வயது சிறுமி துஷ்பிரயோகம் 23 வயது இளைஞர் கைது

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் 16 வயது சிறுமி ஒருவரை ஒரு வருடகாலமாக பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுவந்த சிறுமியின் எதிர் வீட்டைச் சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவரை நேற்று இரவு கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் சிறுமி 15 வயதாக இருக்கும் போது சிறுமியின் எதிர்வீட்டில் உள்ள இளைஞனை திருமணம் முடிப்பதற்கு பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் குறித்த இளைஞன் திருமணப் பேச்சு இடம்பெற்ற காலத்தில் இருந்து கடந்த ஒருவருடகால மாக சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுவந்த நிலையில் தற்போது சிறுமியை திருமணம் முடிக்க முடியாது என மறுப்புத் தெரிவித்ததையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் ஆலோசனைக் கமைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி வை. விஜயராஜா தலைமையிலான பொலிஸார் குறித்த இளைஞனை கைது செய்தனர். இதில் கைது செய்யப்பட்ட இளைஞனை நீதிமன்றில் ஆஜர்படுத்தநடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்திய சாலையில் சேர்த்துள்ளதாவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்



# திருகோணமலை-மட்டக்களப்பு பிரதான வீதியில் பாரிய விபத்து

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி தோப்பூர், பட்டித்திடல் பகுதியில் டிப்பர் ஒன்றும் பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த 26 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து இன்று காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறையிலிருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான பஸ்ஸும், மூதூரிலிருந்து சேருவில நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பரும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதில் அதிகளவில் அரச உத்தியோகத்தர்கள் பயணம் செய்தனர் எனவும் இதுவரைக்கும் 26 பேர் காயமடைந்த நிலையில் மூதூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்

இவ்விபத்தில் வாகனத்தில் சிக்கிய டிப்பர் வாகனத்தின் சாரதி, சுமார் அரை மணி நேர போராட்டத்தின் பின் பொதுமக்களால் மீட்கப்பட்டதோடு, விபத்தில் அவரது கால்கள் சேதமடைந்துள்ளதாக, தெரிவிக்கப்படுகின்றது.



# மட்டக்களப்பில் காதலி வீட்டாரை வெட்டிப்போட்ட காதலன் குழுவினர்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுரத்தில் பெண் ஒருவரை காதலித்து வரும் இளைஞர் ஒருவர் அவரது குழுவினருடன் பெண்ணின் உறவினர் மீது மேற்கொண்ட வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட 7 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள பெண் ஒருவரை இளைஞர் ஒருவர் ஒருபக்கமாக காதலித்து வந்துள்ளார் எனவும், அப்பெண்ணுக்கு விருப்பமில்லாத நிலையில் அவரை இளைஞன் பின் தொடர்ந்து தொந்தரவு கொடுத்து வந்துள்ளார் எனவும் இதனையடுத்து இருவரது உறவினருக்கிடையே இரண்டு தடவைகள் கைகலப்புக்கள் இடம்பெற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் இருபக்கமும் சமாதானமாகச் சென்றனர்.

இந்த நிலையில் சம்பவதினமான நேற்று இரவு 7 மணியளவில் ஜெயந்திபுரத்தில் வீதியில் வைத்து குறித்த பெண்ணின் உறவினர் மீது இளைஞனின் குழுவினர் வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தின் 7 பேர் படுகாயமடைந்தமையை அடுத்து அந்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தாக்குதலில் படுகாயமடைந்தவர்கள் மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தாக்குதலை மேற்கொண்ட குழுவினரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு உதவி!



தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சிரச – சக்தி நிறுவனங்களினதும் மகாராஜா குழுமத்தினதும் தலைவர் அமரர் இராஜமகேந்திரனின் நினைவாக அவர்களது அனுசரணையில் 24 லட்சம் ரூபா பெறுமதியான இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வழங்கிவைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திலீபனால், தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் ஏற்கனவே மூன்று இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் உள்ளன என்றும் தற்போது 4 ஆவது இயந்திரம் எதிர்க்கட்சித் தலைவரின் முயற்சியால் கிடைக்கப்பெற்றுள்ளது. இன்னும் ஓர் இயந்திரம் கிடைக்கப்பெறுமானால் எமது மக்களுக்கு தீவிரமான சேவையை வழங்க முடியும் என்றும் படுக்கைகளுக்கு போதியளவு இடவசதியின்மையால் அதற்குரிய கதிரைகள் சில இருப்பின் நன்று என்றும் ஒரு கதிரையின் பெறுமதி 5 லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்குக் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உடனே எவ்வித மறுப்புகளுமின்றி அதற்குரிய ஏற்பாட்டை தான் வழங்குவதாகவும் அதற்குரிய நிறுவனத்தின் இயக்குநரை அழைத்து உடன் ஏற்பாடு செய்யுமாறும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஸ்பத்திரன, சஜித் பிரேமதாஸ வின் மனைவி ஜெலனி பிரேமதாஸ, கொழும்பு மாநகரசபை உறுப்பினர் உமாசந்திரபிரகாஷ், வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர்நலன்புரிச்சங்கசெயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் ஆகியோருடன் வைத்தியசாலை சமூகம் மற்றும் நோயாளர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் எனப் பலர்; கலந்துகொண்டனர்.




# வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை முன்றிலில் கவனவீர்ப்பு போராட்டம்!

வலி.கிழக்கு பிரதேச சபை முன்றிலில் பிரதேச சபைச் செயலாளரை அச்சுறுத்தியவரைக் கைது செய்யக் கோரி கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுபட்டது.

கடந்த சனிக்கிழமை வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக மதில் அமைக்கப்படுவது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் பார்வையிட செயலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அந்த இடத்துக்குச் சென்றுள்ளனர். அங்கு மதில் அமைத்தவர் செயலாளரை அச்சுறுத்தி அவருடைய கைத்தொலைபேசியை பறித்து உடைத்து, தொலைபேசியை எடுத்துச் சென்றுள்ளார்.

அது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர் வெளிநாட்டு பிரஜை எனவும் தற்போது அவர் நாட்டை விட்டு வெளியேறி உள்ளார் எனவும், அவரை உடனடியாகக் கைது செய்யக்கோரி இன்று (திங்கட்கிழமை) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் திருவள்ளுவர் விழா!

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தால் திருவள்ளுவர் விழா இரு நாள்களாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் சிவபாலன் தலைமையில் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக் களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சுஜீவாவும் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் பா.அருள்பாலமேனன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கருத்துரைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முனைவர் தணிகாசலம், தமிழ்ச் சங்கத்தின் தலைவர் வைத்தியர் மா. ஜெயராசா, தமிழ்ச் சங்கத்தின் வாழ் நாள் தலைவர் இறைபிள்ளை மற்றும் விருந்தினர்களும் நிகழ்த்தினர்.

அதன் பின் கிளிநொச்சி மாவட்டத்தில் வைத்தியத்துறையிலும் கல்வித்துறையிலும் சிறந்த பணிகளை ஆற்றிய வைத்தியர் குகராஜா மற்றும் கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் முதல்வர் மீனலோஜினி ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்வில் வைத்தியர்கள், பாடசாலையின் முதல்வர்கள், முன்னாள் முதல்வர்கள், திணைக்கங்களின் தலைவர்கள், கலைஞர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## தமிழ் தேசிய மக்கள் முன்னணி மகளிர் அணி ஏற்பாட்டில் மகளிர் வளர்ச்சி நாள் நிகழ்வு!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் மகளிர் வளர்ச்சி நாள் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

பெண்களே நம் தேசத்தின் கண்கள் எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் எழுச்சியோடு முன்னோக்கி செல்ல வேண்டும் என்னும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் வாசுகி சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பல்பொருள் அங்காடியில் திருடிய நபர் நடு வீதியில் கழுத்தறுத்து தற்கொலை!

ராகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஹபாகே வீதியிலுள்ள பல்பொருள் அங்காடியொன்றை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் நபர் ஒருவர் உடைத்து திருடியுள்ளார். பின்னர் சிறு குழந்தைகளுக்கு பயன்படுத்தப்படும் வாசனை திரவியத்தை எடுத்துக்கொண்டு பணம் செலுத்தாமல் வெளியே வந்துள்ளார். இதன்போது அருகில் இருந்த ஓட்டோ சாரதி ஒருவர் அவரை பிடிக்க முற்பட்ட போது ஓட்டோ சாரதியை கையில் வைத்திருந்த கத்தியால் குத்திவிட்டு குறித்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

பின்னர், மற்றொரு குழு சந்தேக நபரை துரத்திச் சென்ற போது, யாரும் நெருங்க வேண்டாம் என்றும் அவ்வாறு செய்தால் கழுத்தை அறுத்துக் கொள்வதாக அவர் மிரட்டியுள்ளார். பின்னர் சந்தேக நபர் கையில் வைத்திருந்த கத்தியால் கழுத்தை அறுத்துக் கொண்டுள்ளார்.

குறித்த பல்பொருள் அங்காடியில் இருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பின்னர் சந்தேகநபர் அம்புலன்ஸ் மூலம் ராகம வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் குறித்த நபர் இறந்து விட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரின் சடலம் ராகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஈகொல்ல, உக்குவெலவத்தை பகுதியைச் சேர்ந்த 44 வயதான ரெஜி வனசுந்தர என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் காயமடைந்த ஓட்டோவின் சாரதி ராகம வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவர் ராகம பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய தினுக லக்ஷான் பீரிஸ் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.01.2022இல் வெளியிடப்பெற்றது.